எம்.சி.ஓ.பி. எண்: 634/2016 மற்றும் 5352/2018 (Joint Trial) தேதி : 29.4.2024

ம.சா. : 1
பெயர் : திருமதி. புஷ்பராணி
த/பெ. : லேட் திரு. மணிகண்டன்
வயது : 31

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திரு. மணிகண்டனுடைய இறப்பு அறிக்கையில் அவர் திருமணமாகதவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் காண்பிக்கும் ஆவணத்தில் அவ்வாறு காணப்படுகிறது. சென்னை மாநகராட்சி வழங்கிய படிவம் 5–லும் அவர் திருமணமாகதவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் காவல் துறை இறப்பு அறிக்கை மற்றும் சென்னை மாநகராட்சி வழங்கிய படிவம் 5 மற்றும் மயான அறிக்கையை என்னுடைய நிரூபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 10–ஆன ஆவணத்தில் எனது பெயர் இடைச்செறுகலாக LW–3 மற்றும் LW–4 இடையே சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் காவல் துறையினரின் விசாரணையின் போது இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக காவல் துறையினருக்கு கையூட்டு கொடுத்து எனது பெயர் இடைச்செறுகலாக உள்ளே சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனைவி என்ற முறையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை என்னிடம் எந்த வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. என்னை உண்மையாகவே விசாரித்து வாக்குமூலம் பெற்றிருந்தால் குற்றப்பத்திரிக்கையில் சாட்சி பட்டியிலில் வரிசை எண் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது வாரிசு சான்று கோரி எப்போது விண்ணப்பித்தேன் என்றால் 2016–ல் இராயப்புரம் தாலுகாவில் விண்ணப்பித்தேன். மாதம், தேதி நியாபகம் இல்லை. எனக்கு வாரிசு சான்று தரவில்லை. அதன் பிறகு 15.02.2023–ல் தண்டையார் பேட்டையில் தந்தார்கள். 8 ஆண்டுகள் கழித்து இந்த வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராயபேட்டையில் நான மட்டும் தான் வாரிசு என மனு எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. இராயபேட்டையில் இறந்தவரின் பெற்றோரை விசாரிக்க வேண்டும் என கூறினார்கள் என்றால் இல்லை. பெற்றோர் பற்றிய தேவையான ஆவணங்களை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் இராயபுரத்தில் அவரது வீட்டில் வந்து விசாரித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராயபுரத்தில் அவரது பெற்றோர்கள் தான் வாரிசு என சான்று வழங்கியது எனக்கு தெரியுமா என்றால் முதலில் தெரியும் என்றார்கள், மறுபடியும் மாற்றி தெரியாது என்றார்கள். நான் ஏன் உயர் நீதிமன்றத்தை எல்லாம் அனுகவில்லை என்றால் நான் நீதிமன்றத்தை அனுகித்தான் உத்தவுரவு பெற்றுள்ளேன், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் 8 ஆண்டுகள் கழித்து வாரிசு

சான்றை கையூட்டு கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வாரிசு சான்று முறைப்படி விசாரித்து வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. தண்டார்பேட்டை வட்டாச்சி அலுவலகத்தில் 2016–ல் அப்பா, அம்மாவிற்கு மட்டும் ஒரு வாரிசு சான்று கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், 8 ஆண்டுகள் கழித்து இறந்த திரு. மணிக்கண்டனுக்கு எனது பெயரையும் சேர்த்து ஒரு வாரிசு சான்று கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கணவன், மனைவியாக வாழ்ந்ததற்கு ஆதாரமாக குடும்ப அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் என்றால் சரிதான். எனது கணவர் இரண்டு மாதத்திலேயே இறந்து விட்டார். முதலமைச்சர் நிவாரண நிதி வாங்கவில்லை, அதற்காக மனு கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2023–ல் தான் வாரிசு சான்று பெற்றுள்ள காரணத்தால் அதற்கு பிறகு தான் நான் மனுவே கொடுத்திருக்க முடியும் என்றாலும், நான் பொய்யாக தகவல் கொடுக்கிறேன் என்றாலும் சரியல்ல. திரு. மணிகண்டனின் பெற்றோர்கள் பெற்றவர்கள் என்ற முறையில் ஏற்கனவே அந்த தொகையை வாங்கி விட்டார்கள் என்றாலும் நான் மனைவி இல்லை என்ற காரணத்தினால் தான் அது கொடுக்கப்படவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மனைவி என்ற முறையில் எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன திரு. மணிகண்டன் வேலை செய்யும் இடத்தில் நீங்கள் அவரை பற்றி தெரிந்து கொண்டு அவர் இறந்த பிறகு மனைவி என்று உரிமை கோரி மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனைவி என்று முறையில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.